கிறிஸ்துவ நம்பிக்கையில் அடங்கியுள்ள உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு புனித பவுல் உதவியுள்ளார். நமக்கு நம்பிக்கை அளிக்கவில்லை, ஏதோ வேறென்று என நாம் கூறியிருக்கிறோம். இதனை நாம் நன்கு அறிந்து கொள்ள புனித பவுல் நமக்கு உதவுகிறார். நமது வாழ்வின் நமது விசுவாச அனுபவத்தின் இரண்டு முக்கிய குணங்களைக் கொண்டு இன்று நமக்கு அவர் விளக்குகிறார். “ஊக்கம்”, “ஆறுதல்” (வசனம் 4-5) ஆகிய இரண்டு வார்த்தைகள் வழியாக அதனை புனித பவுல் விளக்குகிறார். உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் இரண்டு முறை இந்த வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் அர்த்தம் என்ன? நம்பிக்கைக்கு அவை தரும் ஆதாரம் என்ன? விடாமுயற்சி, ஆறுதல் ஆகிய இரண்டு குணங்கள்.

விடாமுயற்சி என்பது உண்மையில் பொறுமையைக் குறிக்கிறது. கடமையை ஏற்றுக் கொண்ட ஒருவர் எதிர்நோக்கும் இடர்களுக்கு இடையில் தொடர்ந்து விசுவாசமாக இருப்பதற்கான “ஆதரவு” வேண்டும். சுமையை தாங்க முடியாத அளவிற்கு இருந்தால், பாதகமான முடிவுக்கு வந்து, அனைத்தையும் கைவிடுகிறோம். ஆறுதல்

என்பது நமக்கு கிடைத்த அருள், ஏமாற்றம், வேதனை நிறைந்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் கடவுளின் பரிவிரக்கச் செயலைக் காண முடியும். திருநூல், குறிப்பாக விவிலியம், விடாமுயற்சியையும் ஆறுதலையும் வழங்குகின்றது. முதலில், இயேசுவை ஆழ்ந்து நோக்கி, அவரோடு நெருங்கி, அவரைப் போல் இருக்க, இறைவார்த்தை நம்மை இட்டுச் செல்கிறது. இரண்டாவது, கடவுள் உண்மையிலேயே “விடாமுயற்சியும் ஆதரவும்” கொண்ட ஆண்டவர் என்பதை இறைவார்த்தை தெளிவுப்படுத்துகிறது. அவர் எப்போதும் நம்மீது அன்பு கொண்டிருக்கிறார். நம் மீதான அவரது அன்பு என்றென்றும் மாறாது. நம்மை அன்பு செய்வதில் அவர் ஓய்ந்து போதில்லை. அவர் நம்மை பாதுகாத்து வருகிறார். தமது நன்மைத்தனத்தாலும் இரக்கத்தாலும் நமது காயங்களை தேற்றுகிறார். நமக்கு ஆறுதல் அளிப்பதை என்றென்றும் அவர் நிறுத்துவதில்லை.

அப்போஸ்தலர்களின் தொடக்க கால விசுவாச உறுதிப்பாட்டில் இதனைக் காணலாம். “பலவீனர்களின் தோல்வியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும், அதில் நாம் ஆனந்தம் கொள்ளக்கூடாது . இது, “நாம் வலிமையானவர்” என்ற தோன்றதை வழங்கும், ஆனால் நற்செய்தி கோணத்தில் பார்த்தால், நாம் வலிமையானவர் அல்ல, நமது வலிமையை நம்மிடமிருந்து வருவதில்லை, மாறாக கடவுளிடமிருந்து பெறுகிறோம். கடவுளின் அன்பு பிரமாணிக்கமாக தமது வாழ்வு அமைவதாக உணரும் ஒருவர், அவரது ஆறுதல் கிடைப்பதாக நம்பும் ஒருவர், வலிமையற்ற சகோதர-சகோதரிகளை அரவணைக்கும் கடமை உண்டு. ஆண்டவரோடு நாம் இணைந்திருந்தால், உதவித்தேவைப்படுவோரை அணுகும் வலிமையை நாம் பெறுவோம். நம்மை நாமே பெருமிதம் கொள்வதற்காக அல்லாமல், கடவுள் கொடையைப் பகிர்ந்து கொள்ளும் பாலமாக நாம் இருப்பதை உணர்வோம். இந்த வலிமையாலும் மற்றும் ஆறுதல் அளிக்கும் மனத்திறனாலும் இதனை செய்ய ஆண்டவர் நம்மை வினவுகிறார். இந்த நம்பிக்கை விதையை விதைப்பது அவ்வளவு எளிதல்ல...

ஆயினும் கிறிஸ்துவும் அவரது வார்த்தையும் நமது வாழ்வின் மையமாக இருந்தால் இது சாத்தியமே, ஏனெனில் அவரே வலிமை. அவரே நமக்கு வலிமையையும் பொறுமையையும் நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுப்பவர். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் “பெரிய அண்ணன்” அவரே. நல்லாயன் சுமந்து சென்று, அவரது அன்பிலும் பாதுகாப்பிலும் காத்துக் கொள்வார்.

விவிலியத்தின் வாயிலான கிடைக்கப் பெற்ற அவரது வார்த்தை கொடைக்கு நம்மால் நன்றி கூற இயலாது. அவ்வார்த்தையில்தான், கடவுள் அன்பையும் ஆறுதலையும் காண்கிறோம். நமது திறமையிலும் வலிமையிலும் நமது நம்பிக்கை அமையவில்லை மாறாக கடவுளின் ஆதரவாலும் மாசற்ற அன்பிலும் நமது நம்பிக்கை அமைகிறது. ✢

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

31 டிசம்பர் 2017
திருக்குடும்பம்



# உலகில் விதைக்கப்பட்ட நம்பிக்கை

# மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*

*என் நிலையில் கிறிஸ்துவை அனுபவிக்கிறேன்*

## *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*

## *( 1848 – 2018 )*

***பங்கு அலுவலக நேரம்:***

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** கிறிஸ்து பிறப்புக் காலம் - திருக்குடும்ப விழா: **(ஆண்டு இரண்டு) சனி 30-12-2017 ஞாயிறு 07-01-2018**

தொநூ 15: 1-6, 21:1-3 தி.பா 104: 1-2, 3-4, 5-6, 7-8 எபி 11: 8, 11-12, 17-19 லூக்கா 2: 22-40

**ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொண்டுள்ளார் (தி.பா 104)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (வழிபாட்டுக் குழு) | **31 டிசம்பர் : அனைத்து திருப்பலிகளிலும் குடும்பங்களுக்கு விசேட ஆசீர்வாதம் வழங்கப்படும்.** |
| ஞாயிறு | 31 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆங்கிலம்) (கு. வா. பணிக்குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மிண்டும் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

**ஞாயிறு 31 : புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி :** இரவு 8.00 நான்கு மொழி திருப்பலி - நள்ளிரவு வரை அமைதியில் செபித்தல்

**திங்கள் 01-01-2018 : புதுவருடம் :** கா **7.00** மணி **(த)** கா **9.00 (ஆ)** கா **11.00 (சீ)** மதி **1.00 (**தே.மொ**) அன்னை மரியாள் கடவுளின் தாய்**

| | | | | |
|---|---|---|---|---|
| செவ் | 02 | 6.45 கா | திருப்பலி | |
| புதன் | 03 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 04 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) - பு.வனத்துச் சின்னப்பர் சிற்றாலயம்- ரகாங்* |
| வெள் | 05 | கா திருப்பலி நடைபெறாது | | *மாலை 7.30மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) (முதல் வெள்ளிக்கிழமை)* |

**ஆண்டவரின் திருக்காட்சி விழா: ( ஆண்டு இரண்டு)**

எசா 60: 1-6, தி.பா 71: 1-2, 7-8, 10-11, 12-13 எபே 3 2-3a, 5-6 மத்தேயு 2: 1-12

**ஆண்டவரே, எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள் (தி. பா 71)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 06 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. கிறிஸ்தோபர்) | |
| ஞாயிறு | 07 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. மரியாள்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **புதிய மறைக்கல்வி வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும் (அனைத்து மொழி)**<br>முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

திருப்பலியை வழி நடத்திய குடும்ப நல்வாழ்வுப் பணிக்குழு
மற்றும் திருவழிபாட்டுக் குழுவினருக்கு நன்றி

**2017 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை** 23/24 **டிசம்பர் ரிம**: 7,896.65
**கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலி** 24/12 **ரிம**: 18,066.2
**தித்தி ரிம**: 362.00 **கிறிஸ்மஸ் நாள்** 25/12 **ரிம**: 10,475.60

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

2) அனைத்து மொழி ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளும் ஜனவரி 07 ஞாயிறு அன்று தொடங்க உள்ளது. பதிவுகள் அந்தந்த வகுப்பறைகளில் நடைபெறும்.

- **மினவுதல் மாதா தேவாலயத்தின் முக நூல் பக்கம் (@churchofthevisitationsban)** ஆலயத்தின் முக நூலில் அண்மையச்செய்திகள் பதிவேற்றம் கண்டு வருகின்றன. அனைத்து வயதினரைக் கொண்ட பங்கு மக்களோடும் தொடர்புகொள்ள இது ஒரு நல்ல தளம்
- **ஐஹீரோ நிதி ஓட்டம் -** Aclac.இணைந்து ஏற்பாடு செய்கிறார்கள். நாள்: 21/01/2018 கூடுதல் விவரங்களுக்கு அழையுங்கள்: பமேலா 016-630 6196
- **170 ஆம் ஆண்டு கொண்டாட்டம் பிப்ரவரி 3, 2018**

அனைத்து மொழியினரும் பங்கெடுக்கலாம்.
வயது 7 வயதினருக்கும் மேல்
தொடர்புக்கு:
எட்ரியன்(ஆ) 010-897 0642
அண்டர்சன் (தேமோ) 019-4688 277
ஐரின் (த) 016-366 6843
எட்வின் (சீ) 012 2059209




- **ஜோன் போல் II தூதுரை இல்லம்:** எண்: 11 & 12 கடை இல்லம் (நம் உணவுவிடுதிக்குப் பின் உள்ளது) இப்போது பராமரிப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவை முழு வெற்றியடைய உங்கள் செபங்களில் ஒப்புக்கொடுங்கள்.
- **இறந்தோர் திருப்பலியில் இறுதி உரை:** இறந்தோருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இறப்புத்திருப்பலியில் சிறு உரை கொடுக்க விரும்பினால், தயவு செய்து பங்கு குருவானவரை சந்திக்கவும். உரை தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும் (சுருக்கமாக). இதை அதிச/சோன் பொறுப்பாளர்களும் கவனத்தில் கொள்ளுங்கள்.
- **கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் 18 – 25 ஜனவரி 2018 :** சிரம்பானிலுள்ள கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுடன் இச் செப வாரத்ததைக் கொண்டாடுவோம். 26-01-2018 (வெள்ளி) மாலை 8.00மணிக்கு இந்நிகழ்வை மினவுதல் மாதா தேவாலயம் வழிநடத்துகின்றது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- **2018 ஆம் ஆண்டின் திருமணம் செய்வோரின் கவனத்திற்கு:** குருவானவரைச் சந்திக்க தயவு செய்து முன்பதிவு செய்துகொள்ளவும். கத்தோலிக்க திருமண பயிற்சிகள் விரைவில் தொடங்கவுள்ளன.
- **ஆலய வளாகம் மற்றும் அறைகள் முன்பதிவு:** கூட்டங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு முன்கூட்டியே அறைகளை பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுங்கள். கடைசி நேர பதிவு அனுமதிக்கப்படாது.
- **ஆலயத்தூய்மை கடைப்பிடியுங்கள்:** ஆலயம் அதன் சுற்றுப்புறம் (உள்ளும் புறமும் எப்போதும் தூய்மையாக வைத்திருங்கள்.மாதா கெபி மற்றும் மெழுகுத்திரி தட்டுகள் ஆகியவற்றை எப்போதும் தூய்மையாக வைத்திருப்போம்.
- **குருத்துவ அபிஷேகக் கொண்டாட்டம்**: டீக்கன் நிக்கோலஸ் ஹோ ஜெங் கின்( ரஹாங் கார்மேல் சபை, சிரம்பான்_
நாள்: ஜனவரி 31, 2018 (பொதுவிடுமுறை) காலை 10.30
இடம்: புனித தோமஸ் மூர் ஆலயம், சுபாங் ஜெயா
அனைவரையும் வரவேற்கிறோம்.

**அருள்திரு. ஜோர்ஜ் ஹாரிசன் & அருள்திரு அண்ட்ரூ கூய் இருவரும் பங்கு மக்களுக்கும், குறிப்பாக திருவருகைக்காலம் மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்ட திருவழிப்பாட்டு ஏற்பாடுகளை செய்த திருவழிபாட்டுக் குழுவினருக்கும் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.**